بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *16/09/2022* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 33 அன்னாரது வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் புகழத்தக்க பண்புகள் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுடைய காலத்து அரும்பணிகளைப் பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. இது தொடர்பாக ஸிம்மீகளின் உரிமைகளைப் பற்றிய விளக்கம் சிறிது உள்ளது.

ஸிம்மீ என்பவர்கள், இஸ்லாமிய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட சம்மதித்து தங்களது மதத்தில் நிலைத்திருந்தவர்கள் ஆவார்கள். இந்த மக்கள் ராணுவ தொண்டுகளை ஆற்றுவதிலிருந்தும் ஸகாத் கொடுப்பதிலிருந்தும் விலக்குப் பெற்றிருந்தார்கள். எனவே, இந்த ஸிம்மிகளில் பருவமடைந்த, ஆரோக்கியமான மற்றும் வேலை பார்க்கும் தகுதிவாய்ந்த மக்களிடமிருந்து ஆண்டுக்கு நான்கு திர்ஹம் ஜிஸ்யா வரி வசூலிக்கப்பட்டு வந்தது.

முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், இயலாதவர்கள், தேவையுடையவர்கள் மற்றும் பிள்ளைகள் இதிலிருந்து விலக்குப் பெற்றிருந்தார்கள். இன்னும் கூறுவதாயின், இயலாதவர்களுக்கும் தேவை உடையவர்களுக்கும் இஸ்லாமிய பைத்துல் மாலிலிருந்து உதவி செய்யப்பட்டு வந்தது. ஈராக் மற்றும் சிரியா வெற்றிகளின் போது, முஸ்லிம் அல்லாத பல்வேறு மக்கள் கூட்டங்கள் ஜிஸ்யா வரி செலுத்த சம்மதித்து ஸிம்மிகளாக ஆகி விட்டார்கள்.

அவர்களுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகளில் இது போன்ற சில பகுதிகளும் வைக்கப்பட்டிருந்தன. அதாவது, அவர்களது துறவி மடங்களும் தேவாலயங்களும் இடிக்கப்பட மாட்டாது. அவர்கள் எதிரிகளுடன் போரிடுகையில், தேவை ஏற்படும் போது அடைபட்டு இருந்து கொள்ளும் அத்தகைய கோட்டைகளும் வீழ்த்தப்பட மாட்டாது. மணி அடிப்பதை விட்டும், பண்டிகைகளின் போது சிலுவை ஏந்துவதிலிருந்தும் தடுக்கப்பட மாட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் மிகப் பெரிய, நிகரற்ற மற்றும் ஒரு மாபெரும் சிறப்புப் பணியாகத் திருக்குர்ஆனைத் தொகுப்பது இருந்தது. யமாமா போரில் ஏறத்தாழ 700 சஹாபா பெருமக்களும் கண்ணியத்திற்குரிய ஹாஃபிஸ்மார்களும் ஷஹீத் ஆகி விட்டார்கள். அப்பொழுது, அல்லாஹ் திருக்குர்ஆனைத் தொகுப்பதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி)

அவர்களின் உள்ளத்தைத் திறந்தான். சஹீஹ் புகாரியில் பதியப்பட்டள்ள விவரப்படி, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸைத் பின் சாபித் (ரலி) அவர்களை வரவழைத்தார்கள். அவர்களிடம், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனைத் தொகுக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளதாகக் கூறினார்கள். இவ்வாறு இந்தப் பணியை ஹஸ்ரத் ஸைத் பின் சாபித் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

**ஹஸ்ரத் ஸைத் பின் சாபித் (ரலி) கூறுகிறார்கள்:**

"அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு மலையை அதன் இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றி வைப்பதற்குக் கட்டளை இட்டிருந்தார்கள் எனில், அது எனக்கு இந்தப் பணியை விட எளிமையானதாக இருந்திருக்கும்."

**ஹஸ்ரத் ஸைத் பின் சாபித் (ரலி) கூறுகிறார்கள்:**

"நான் திருக்குர்ஆனைப் பேரீத்த மரப்பட்டைகளில் இருந்தும், வெண்மையான கற்களில் இருந்தும் மக்களின் உள்ளங்களில் இருந்தும் ஒன்று திரட்டினேன்."

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸைத் பின் சாபித் (ரலி) அவர்கள் மூலமாக எந்தத் திருக்குர்ஆனை ஒரு நூல் வடிவில் தொகுக்கச் செய்தார்களோ அது சஹீஃபாயே சித்தீக்கீ எனப்படுகிறது. இது ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடமும் பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடமும் பிறகு, உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடமும் இருந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சஹீஃபா சித்தீக்கியிலிருந்து சில (திருக்குர்ஆன்) பிரதிகளை எழுத வைத்தார்கள். மேலும், அந்தப் பிரதியை ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

ஹிஜ்ரீ 54 ஆம் ஆண்டு மர்வான் மதீனாவின் கவர்னர் ஆனபோது, அவர் அந்தப் பிரதியை ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடமிருந்து பெற நினைத்தார். ஆனால், ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் (கொடுக்க) மறுத்து விட்டார்கள். ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் வஃபாத்துக்குப் பிறகு, மர்வான் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமரிடமிருந்து இந்தப் பிரதியைப் பெற்று அதை வீணாக்கி விட்டார்.

**ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

"அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் மீது கருணை புரிவானாக! அவர்கள் முதன்முதலாக திருக்குர்ஆனை நூல் வடிவில் பாதுகாத்தார்கள்."

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

"எந்த அளவு தொடர்ச்சியாக உலகில் திருக்குர்ஆன் நிலை பெற்றிருக்கிறதோ அந்த அளவு தொடர்ச்சியாக எந்த எழுத்துப் பிரதியும் நிலை பெற்றிருக்கவில்லை என்பதே உண்மை."

**மேற்கொண்டு கூறுகிறார்கள்:**

"ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் முழுத் திருக்குர்ஆனும் எழுதப்பட்டிருந்தது. ஆனால், ஒரு தொகுப்பில்

இருக்கவில்லை. எனவே, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனைத் தொகுக்குமாறு கட்டளையிட்டார்களே அன்றி, எழுதுமாறு கட்டளையிடவில்லை. ஆக, அந்த நேரத்தில் திருக்குர்ஆனின் தாள்களை ஒரு நூல் வடிவில் தொகுப்பது பற்றிய விஷயமாக இருந்தது; எழுதுவது தொடர்பான விஷயம் இருக்கவில்லை என்பதைச் சொற்களே தெரிவிக்கின்றன.''

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் முழு முஸ்லிம் உலகையும் ஒரே கிரஅத்தில் ஒன்றிணைக்கப்பட்டது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "முதல் கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனின் எல்லா சூராக்களையும் நபியே கரீம் (ஸல்) அவர்களிடமிருந்து செவியேற்ற வரிசைப்படி ஒன்று சேர்ப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். அடுத்து ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்குப் பிறகு, அல்லாஹ் மூன்றாவது கலீஃபா ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு நல்வாய்ப்பு வழங்கினான். ஆக, அன்னார் குறைஷியர்களின் மொழி வழக்கிற்கு ஏற்ப, திருக்குர்ஆனை ஒரு கிரஅத்தில் ஒன்றிணைத்தார்கள். மேலும், அதை எல்லா நாடுகளிலும் பரவச் செய்து விட்டார்கள்.''

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுடன் தொடர்புடைய, முதன் முதலாக நடந்தேறிய சிறப்புப் பணிகள் அவ்வலியாத்தே அபூபக்ர் - அபூபக்ரின் முதன்மைப் பணிகள் என்று கூறப்படுகின்றன. அவை பின்வருமாறு:**

அன்னார் எல்லாருக்கும் முதலாக இஸ்லாத்தை ஏற்றார்கள். எல்லாருக்கும் முதலாக மக்காவில் தமது இல்லத்திற்கு முன்னதாகப் பள்ளியை அமைத்தார்கள். எல்லாருக்கும் முதலாக, மக்காவில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஆதரவாக மக்கத்து குறைஷியர்களுடன் சண்டையிட்டார்கள். எல்லாருக்கும் முதலாக, இஸ்லாத்தை ஏற்றதன் காரணத்தால் அநீதி அக்கிரமத்திற்கு இலக்காகிக் கொண்டிருந்த பல்வேறு ஆண்/பெண் அடிமைகளை விடுதலை செய்ய வைத்தார்கள்.

முதன்முதலாக திருக்குர்ஆனை ஒரு நூல் வடிவில் ஒன்று சேர்த்தார்கள். முதன்முதலாக திருக்குர்ஆனுக்கு முஸ்ஹஃப் என்று பெயரிட்டார்கள். எல்லாருக்கும் முதலாக, நேர்வழிபெற்ற கலீஃபாவாக ஆக்கப்பட்டார்கள். எல்லாருக்கும் முதலாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்நாளில் ஹஜ் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்கள். எல்லாருக்கும் முதலாக, ஹுஸூர் (ஸல்) அவர்களின் வாழ்நாளில் முஸ்லிம்களுக்கு தொழுகையில் இமாமத் செய்தார்கள். முதன்முதலாக இஸ்லாத்தில் பைத்துல் மாலை உருவாக்கினார்கள்.

அன்னார் இஸ்லாத்தில் முஸ்லிம்கள் உதவித் தொகை நிர்ணயித்த முதல் கலீஃபா ஆவார்கள். இதே போன்று அன்னார் தமது பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்த முதல் கலீஃபா ஆவார்கள். அன்னார் தமது கிலாஃபத்தில் மக்கள் பைஅத் செய்யும் போது (தமது) தந்தை உயிருடன் இருந்த முதல் கலீஃபா ஆவார்கள். அன்னார் இஸ்லாத்தில் முதன்முதலாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு பட்டப் பெயர் வழங்கிய முதல் நபர் ஆவார்கள்.

அன்னார் நான்கு தலைமுறைகள் சஹாபாவாக இருக்கும் கண்ணியம் பெற்ற முதல் நபர் ஆவார்கள். அன்னாரின் தந்தையார் அபூ கஹாஃபா (ரலி) அவர்கள் சஹாபி ஆவார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தாமும் சஹாபியாக இருந்தார்கள். அன்னாரின் மகன் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலியல்லாஹு அன்ஹுமா) மற்றும் அன்னாரின் மகன்வழிப் பேரர் ஹஸ்ரத் முஹம்மத் பின் அப்திர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகிய இவர்கள் அனைவரும் சஹாபாவாக இருந்தார்கள்.

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் தோற்றத்தைப் பற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்:**

"அன்னார் வெள்ளை நிறத்தையுடைய ஒல்லியான மனிதராக இருந்தார்கள். கன்னங்களில் சதை குறைந்தும், இடை சற்று வளைந்தும், கண்கள் உள்பக்கமாகவும், நெற்றி விசாலமாகவும் இருந்தன."

**ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:**

"அன்னார் தமது தலைமுடியில் நிறமிட்டு வந்தார்கள்."

அன்னார் ஒரு பறவையைப் பார்த்த போது இவ்வாறு கூறினார்கள்:

"நான் இந்தப் பறவையைப் போன்று இருந்திருக்கக் கூடாதா! இதனிடம் எந்தக் கேள்வி கணக்கும் இருக்காது. இது பதிலளிக்க வேண்டியதாகவும் இருக்காது."

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது வஃபாத் நேரம் நெருங்கிய போது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்:**

"எனது மகளே! எனக்கு மக்களில் எல்லாரையும் விட அன்பிற்குரியவர் நீங்கள் தான் என்பது உங்களுக்குத் தெரியும். நான் என்னுடைய இன்ன இடத்து நிலத்தை உங்களுக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தேன். ஆனால், நீங்கள் அதை கைவசம் கொள்ளவில்லை.

இப்பொழுது, நீங்கள் அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இவ்வாறு அது என்னுடைய சந்ததிகள் அனைவர் மத்தியிலும் அல்லாஹ்வின் மறை கூறிய விளக்கப்படி விநியோகிக்கப்படட்டும். அப்போது தான் 'நான் எனது சந்ததிகளில் எவருக்கும் மற்றவர் மீது முன்னுரிமை அளிக்கவில்லை' என்று என்னால் இறைவன் முன் கூற முடியும்."

அல்லாஹ் அன்னாருக்கு கிலாஃபத் ஆடையை அணிவித்த போது அடுத்த நாளே அன்னார் வழக்கப்படி தோளில் துணி மூட்டையைத் தூக்கிக் கொண்டு வியாபாரம் செய்யப் புறப்பட்டார்கள். வழியில் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களையும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களையும் சந்தித்தார்கள். அவர்கள் கூறியதற்கு ஏற்ப ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு உதவி தொகை நிர்ணயிக்கப்பட்டது.

அந்த உதவித் தொகை என்னவாக இருந்தது? அன்னாருக்கு இரண்டு போர்வைகள் வழங்கப்பட்டு வந்தன. அவை பழையதானதும் அவற்றைத் திருப்பிக் கொடுத்து விட்டு வேறு பெற்றுக் கொள்வார்கள். பயணத்திற்காக சவாரியும் கிலாஃபத்துக்கு முன்னர் என்ன செலவு இருந்ததோ அதற்கு ஏற்ப தொகையையும் பெற்று வந்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

“ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முழு இஸ்லாமிய உலகிற்கும் அரசராக இருந்தார்கள். ஆனால், அன்னாருக்கு என்ன கிடைத்து வந்தது? அன்னார் பொது மக்களின் செல்வங்களின் பாதுகாவலராக இருந்தார்கள். ஆனால், அன்னார் தாம் அந்தப் பணத்தின் மீது எந்த அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை.

அன்னாருடைய கையிலிருந்து (ஒட்டகத்தின்) கடிவாளம் (கை நழுவி) கீழே விழுந்து விட்டால், அன்னார் தமது ஒட்டகத்திலிருந்து இறங்கி தாமே அதை எடுப்பார்கள். இது பற்றி கேட்கப்பட்டால், ‘நான் மக்களிடம் எதையும் கேட்டுப் பெறக்கூடாது என்று எனது அன்பிற்குரியவர் (ஸல்) அவர்கள் எனக்கு கட்டளையிட்டுள்ளார்கள்’ என்று கூறுவார்கள்.”

கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஒருமுறை மக்கள் இவ்வாறு பேசுவதைக் கேட்டார்கள்:

“நம்மை விட அபூபக்ருக்கு எந்தச் சிறப்பு இருக்கிறது? நாம் எப்படித் தொழுகிறோமோ, நாம் எப்படி நோன்பு வைக்கிறோமோ அவ்வாறே தான் அவர்களும் செய்கிறார்கள்.”

அப்பொழுது **ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“அபூபக்ரின் சிறப்பு, தொழுகை மற்றும் நோன்புகளினால் அல்ல. மாறாக, அவரது உள்ளத்தில் இருக்கும் அந்த நன்மையின் காரணமாக இருக்கிறது.”

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஒரு திருக்குர்ஆன் வசனத்திற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தகுதி மற்றும் அந்தஸ்த்தை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:**

“உமக்கு முழுமையான நம்பிக்கை எனும் தரம் கிடைக்கப் பெறாத வரை, அனைத்துத் திரைகளும் இருளின் போர்வைகளும் அகன்று நான் இப்பொழுது முன்னிருந்தவன் அல்ல; மாறாக, இப்பொழுதோ புதிய நாடு! புதிய பூமி! புதிய வானம் இருக்கிறது. நானும் ஒரு புதிய படைப்பினம் ஆவேன் என்பது உமக்குப் புரிந்து விடும் வரை, நீர் இபாதத் செய்து கொண்டே இருப்பீராக!

இந்த இரண்டாவது வாழ்க்கையையே சூஃபிமார்கள் பகா (நிலைத்திருத்தல்) என்ற பெயரால் அழைக்கிறார்கள். ஒரு மனிதர் இந்தத் தரத்தை எட்டி விடும் போது, அல்லாஹ்வின் ஆன்மாவே அவருள் ஊதப்படுகிறது. வானவர்கள் அவரிடம் இறங்குகிறார்கள்.

இந்த ரகசியம் குறித்தே இறை தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொடர்பாக இவ்வாறு கூறினார்கள்: மரணித்த மய்யித் பூமியில் நடப்பதைப் பார்க்க வேண்டும் என்று எவராவது விரும்பினால் அவர் அபூபக்ரைப் பார்த்துக் கொள்ளட்டும். மேலும், அபூபக்ரின் அந்தஸ்த்து அவரது வெளிப்படையான நற்செயல்களால் மட்டுமே அல்ல; அதற்கும் மேற்பட்டு, அவரது உள்ளத்தில் உள்ள அந்த விஷயத்தினால் இருக்கிறது.”

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸிஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:-**

“ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ‘எவருடைய கீழாடை கீழே தொங்குமோ அவர் நரகத்துக்குச் செல்வார்’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இதைக்கேட்டு அழத் தொடங்கினார்கள். ஏனெனில், அவர்களுடைய கீழாடையும் அவ்வாறு தான் இருந்தது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘நீர்! அவர்களைச் சேர்ந்தவர் அல்ல.’ சுருக்கமாக, எண்ணத்திற்குப் பெரும் பங்கு உள்ளது. (உண்மை) நிலையை கருத்தில் கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.’’

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுதல், ரஸூல் (ஸல்) அவர்கள் மீதான நேசம் மற்றும் **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக தன்மான உணர்வு கொள்ளுதல் ஆகியவை பற்றி இவ்வாறு ஒரு சம்பவம் வருகிறது:**

‘‘ஒருமுறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வீட்டிற்கு வந்த போது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சற்று ஆவேசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

இதைக் கண்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தம்முடைய மகள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை அடிக்கச் சென்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதைக் கண்டதும் தந்தை மகள் இருவருக்கும் இடையில் வந்து விட்டார்கள். சாத்தியமாக இருந்த அடியிலிருந்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைக் காப்பாற்றி விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சென்ற பிறகு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், ‘இன்று நான் உங்களை உங்கள் தந்தையிடமிருந்து எவ்வாறு காப்பாற்றினேன் என்று பார்த்தீர்களா?’ என்று நகைச்சுவையாகக் கூறினார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீண்டும் வந்த போது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் மகிழ்ச்சியாக, சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்த ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ‘நீங்கள் உங்களுடைய சண்டையிலோ என்னை இணைத்துக் கொண்டீர்கள். இப்பொழுது உங்களுடைய மகிழ்ச்சியிலும் என்னை இணைத்துக் கொள்ளுங்கள்’ என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நாங்கள் இணைத்துக் கொண்டோம் என்று கூறினார்கள்.’’

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* மற்றவை இனி வருங்காலங்களில் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ
يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)